**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII Code of Criminal Procedure)**
**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, TIRUMANGALAM**
**Case No:CC.641/2023**
**Prosecution Witnesses : 4**

| | | | |
|---|---|---|---|
| Name | : சுரேஷ் | Caste | : |
| Father 's Name / Husband Name | : வேணுகோபால் | Calling | : |
| Village | : | Religion | : |
| Taluk | : | Age | : |

(எதிரிகள் ஆஜர். எதிரிகள் தரப்பில் வழக்கறிஞர் ஆஜர். அரசு உதவி வழக்கறிஞர் ஆஜர் இல்லை)
**(18.03.2026)**
**முதல் விசாரணை**

சாட்சிக்கு சத்தியபிரமாணம் செய்யப்பட்டு சாட்சியம் சொல்ல அனுமதிக்கப்படுகிறார்.

நான் தற்போது மதுரை மாவட்டம் பெருங்குடி காவல் நிலையத்தில் தலைமைக்காவலராக பணிபுரிந்து வருகின்றேன். இதற்கு முன்பு மேற்படி காவல் நிலையத்தில் பணிபுரிந்த சிறப்பு சார்பு ஆய்வாளர் திரு.குமரவேல் மற்றும் சார்பு ஆய்வாளர் திரு.ராஜா ஆகியோர்களின் கையெழுத்து மற்றும் கையொப்பம் எனக்கு நன்கு பரிச்சயம். சார்பு ஆய்வாளர்கள் திரு.ராஜா மற்றும் திரு.சாமியப்பன் அவர்கள் பணி ஓய்வு பெற்றுவிட்டதாலும் மற்றவர்கள் வேறு மாவட்டத்திற்கு சென்றுவிட்டதால் வழக்கு கோப்பை பார்வையிட்டு ஆவணங்களின் அடிப்படையில் நான் சாட்சியம் அளிக்கின்றேன். கடந்த 14.07.2021ம் தேதி பெருங்குடி காவல் நிலையத்தில் சிறப்பு சார்பு ஆய்வாளர் அவர்கள் காவல் நிலையத்தில் நிலைய பொறுப்பில் பணியிலிருக்கும் போது திருமங்கலம் அரசு மருத்துவமனையில் இருந்த கிடைத்த தகவலின் பேரில் அங்கு சென்று அங்கு உள்நோயாளியாக சிகிச்சையில் இருந்த பேச்சி என்பவரை விசாரணை செய்து அவர் அளித்த புகார் வாக்குமூலத்தை பெற்று புகாரின் தன்மைக்கேற்ப நிலைய குற்ற எண். 110/2023 பிரிவுகள் 147, 294(பி), 323, 324, 506(2) இதச மற்றும் பிரிவு 4 TNPHW Act ன் படி வழக்கு

பதிவு செய்து புகார் மனுவையும் முதல் தகவல் அறிக்கையையும் நீதித்துறை நடுவர் நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்துள்ளார். மற்ற நகல்களை மேல் அதிகாரிகளுக்கு அனுப்பி வைத்துள்ளார். **முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ. 2 ஆக குறியீடு செய்யப்படுகிறது**. பின்னர் இவ்வழக்கை சார்பு ஆய்வாளர் திரு.ராஜா அவர்கள் தனது புலன் விசாரணைக்கு எடுத்துக்கு கொண்டு 15.07.2021ம் தேதி காலை 8.00 மணிக்கு வழக்கை விசாரணைக்கு எடுத்துக்கொண்டு சம்பவம் இடம் சென்று சாட்சிகள் வைரதீபா மற்றும் துரைச்சாமி ஆகியோர்களின் முன்னிலையில் சம்பவ இடத்தை பார்வைஇட்டு பார்வை மகசர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்துள்ளார். **மேற்படி பார்வை மகசர் அ.சா.ஆ.3, மாதிரி வரைபடம் அ.சா.ஆ.4 ஆகும்.** மேலும் பட்டியல் சாட்சிகள் 1 முதல் 7 வரை உள்ளவர்களை தனித்தனியே விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்துள்ளார். பின்னர் எதிரிகளை தேடி வந்த நிலையில் எதிரிகள் அனைவரும் முன்பிணை பெற்றுவிட்டதால் அவர்களை கைது செய்யவில்லை. பின்னர் சிறப்பு சார்பு ஆய்வாளர் திரு.குமரவேல் அவர்களை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்து முதல் கட்ட விசாரணையை முடித்து திரு.சாமியப்பன் அவர்களிடம் வழக்கு கோப்பை ஒப்படைத்துள்ளார். பின்பு இவ்வழக்கை சார்பு ஆய்வாளர் திரு.சாமியப்பன் தனது புலன் விசாரணைக்கு எடுத்துக் கொண்டு இவ்வழக்கில் காயம்பட்டவருக்கு சிகிச்சையளித்து காயச்சான்று வழங்கிய திருமங்கலம் அரசு மருத்துவமனை மருத்துவர் திருமதி.பானுமதி என்பவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்துள்ளார். விபத்து பதிவேட்டுடன் கூடிய காயச்சான்று **அ.சா.ஆ.5 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** பின்னர் சார்பு ஆய்வாளர் தனது விசாரணையை முடித்து எதிரிகள் மீது சட்டப்பிரிவுகள் 147, 294(பி), 323, 324, 506(2) இதச மற்றும் பிரிவு 4 TNPHW Act ன் படி குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளார்.

**எதிரிகள் தரப்பில் கு.வி:**

வழக்கு ஆவணங்களை பார்வையிட்டு சாட்சியம் அளித்துள்ளதால் எனக்கு விசாரணை பற்றி தெரியாது என்றும் பொய்யான தகவல்களை தயார் செய்து எதிரியின் மீது பொய்யான குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளனர் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை** இல்லை.